# திருச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

சொல்லை 'Union of States' என்று பயன்படுத்தியவரே புரட்சியாளர் அம்பேத்கர் தான்!

அரசியலமைப்புச் சட்டம் கொடுத்த அண்ணல் அம்பேத்கர் என்ன சொல்லியிருக்கிறார்... "யூனியன் அரசும், மாநில அரசும் தனித்தனி அதிகாரம் பெற்றவை! ஒன்று மற்றொன்றுடன் அடிபணியவில்லை; ஒருங்கிணைக்கப்பட்டு உள்ளது" என்று சொன்னார். அதைத்தான் நாமும் சொல்கிறோம்! "மாகாணங்கள் தெள்ளத் தெளிவான சகலவித தேசிய இன அம்சங்களையும் கொண்டிருக்கின்றன. எனவே, அவற்றின் தேசியப் பண்பு முழுநிறைவாய் வளர்ந்து மலர சுதந்திர வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்" என்றும் புரட்சியாளர் அம்பேத்கர் சொல்லியிருக்கிறார்.

**இந்தியாவில் ஜனநாயகம் காக்கப்பட வேண்டும்!**

இத்தகைய எண்ணம் கொண்ட ஒரு ஒன்றிய அரசை நாம் உருவாக்க வேண்டும்! அதற்கு தொடக்கமாக பா.ஜ.க. ஆட்சி அகற்றப்பட வேண்டும்! தமிழ்நாட்டில் பா.ஜ.க. என்பது, பூஜ்யம்! அதனால் தமிழ்நாட்டில் பா.ஜ.க.வை பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. தமிழ்நாட்டில் மட்டும் பா.ஜ.க.வை வீழ்த்தினால் போதாது! அகில இந்தியா முழுவதும் பா.ஜ.க.வை வீழ்த்த வேண்டும்! அதற்கான அடித்தளம்தான் இந்தியா கூட்டணி! ஒன்றிய அளவில் ஆட்சியில் இருக்கும் பா.ஜ.க. ஆட்சியை வீழ்த்துவதை இலக்காக கொண்ட எல்லா கட்சிகளும் இந்த கூட்டணியில் இணைந்திருக்கிறது!

பா.ஜ.க. என்று சொல்வதால், இது தனிப்பட்ட ஒரு கட்சிக்கு எதிரான கூட்டணி என்று சுருக்கிவிட முடியாது! இந்தியாவின், ஜனநாயகத்தை மக்களாட்சியை மதச்சார்பின்மையை பன்முகத்தன்மையை ஒடுக்கப்பட்ட மக்களை ஏழை எளிய மக்களை காப்பாற்ற வேண்டும் என்றால் பா.ஜ.க. மீண்டும் ஒருமுறை ஆட்சிக்கு வரக்கூடாது! இதுதான் நம்முடைய இலக்கு!

**பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால், இந்தியா என்ற கூட்டாட்சி அமைப்பே இருக்காது. ஜனநாயக அமைப்பு முறையே இருக்காது. நாடாளுமன்ற நடைமுறையே இருக்காது. ஏன்... மாநிலங்களே இருக்காது! இதை எல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டும்! மாநிலங்களை கார்ப்பரேஷன்களாக ஆக்கிவிடுவார்கள்! கண்ணுக்கு முன்பே ஜம்மு காஷ்மீர் சிதைக்கப்பட்டதை பார்த்தோம். ஜம்மு காஷ்மீரை இரண்டாக பிரித்து யூனியன் பிரதேசங்களாக ஆக்கினார்கள். தேர்தல் கிடையாது! அரசியல் கட்சித் தலைவர்களுக்கு வீட்டுச் சிறை! இது தான் பா.ஜ.க. பாணி சர்வாதிகாரம்! அந்த நிலைமைதான் எல்லா மாநிலங்களுக்கும் ஏற்படும்.**

**உலக நாடுகளுக்கு மத்தியில் இந்தியாவுக்கு மிகப்பெரிய தலைகுனிவு!**

கேள்விகள் இல்லாத நாடாளுமன்றம்! 140 எம்.பி.க்கள் சஸ்பெண்ட்! இது நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு அவமானம் இல்லையா? உலக நாடுகள் என்ன நினைக்கும்? சிரிக்க மாட்டார்களா? "உலகின் பெரிய ஜனநாயக நாடு என்று சொல்லிக் கொள்கிறீர்களே, நான்கில் ஒரு பங்கு உறுப்பினர்களை சஸ்பெண்ட் செய்வது தான் உங்கள் ஜனநாயகமா என்று கேட்க மாட்டார்களா? உலக நாடுகள் மத்தியில் இந்தியாவுக்கு மிகப்பெரிய தலைகுனிவை ஏற்படுத்திய ஆட்சியாக பா.ஜ.க. ஆட்சி இருக்கிறது. இன்னும் சொல்ல வேண்டும் என்றால், இந்தியாவை சர்வாதிகார நாடாக மாற்றினாலும் மாற்றிவிடுவார்கள்!

நமக்கு முன்னால் இருக்கும் நெருக்கடி, நாம் உணர்ந்திருப்பதை விட மிக மோசமானது! மிக மிக மோசமானது!

அகில இந்திய அரசியல் தலைவர்கள் இங்கு வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு நான் அதிகமாக விளக்க வேண்டிய தேவை இல்லை! மாநிலத்துக்கு மாநிலம் அரசியல் நிலைமை மாறுபடும்! ஆனால் நடக்கப்போவது நாடாளுமன்றத் தேர்தல்! ஒன்றியத்தில் யார் ஆட்சி நடக்க வேண்டும் என்பதை மட்டும் மனதில் வைத்து எல்லோரும் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பா.ஜ.க. ஆட்சிக்கு வரக்கூடாது என்ற ஒற்றை லட்சியம்தான் எல்லோருக்கும் இருக்க வேண்டும்! பா.ஜ.க.வுக்கு எதிரான வாக்குகள் எந்தக் காரணம் கொண்டும் சிதறக்கூடாது! பகைவர்களோடு சேர்த்து துரோகிகளையும் மக்களிடையே அடையாளம் காட்ட வேண்டும்!

வரலாறு என்ன சொல்ல வேண்டும் தெரியுமா? "இந்தியா கூட்டணி அமைத்தார்கள்! இந்தியாவில் ஆட்சியைக் கைப்பற்றினார்கள்!" இதுதான் வரலாறாக இருக்க வேண்டும்!

**பா.ஜ.க.வின் பயத்தை இந்தியா கூட்டணித் தலைவர்கள் புரிந்து கொள்வீர்!**

ஒரே ஒரு எடுத்துக்காட்டை சொல்ல விரும்புகிறேன். சண்டிகர் மாநகர மேயர் தேர்தல் நடக்க இருந்தது. பா.ஜ.க.வுக்கு 14 உறுப்பினர்கள்! ஆம் ஆத்மி கட்சிக்கு 13 உறுப்பினர்கள்! காங்கிரஸ் கட்சிக்கு 7 உறுப்பினர்கள்! ஆம் ஆத்மி கட்சியும், காங்கிரஸ் கட்சியும் கூட்டணி! மேயர் பதவியை இந்தியா கூட்டணி கைப்பற்றும் நிலைமை உருவானது! இந்தியா கூட்டணியின் முதல் வெற்றியாக இது அமையப் போகிறது என்று வடமாநில ஊடகங்களில் எழுதினார்கள். உடனே என்ன செய்தார்கள் தெரியுமா? தேர்தலையே ரத்து செய்துவிட்டார்கள்!

ஒரு மேயர் தேர்தலையே கேன்சல் செய்கிறார்கள் என்றால், பா.ஜ.க.வுக்கு ஏற்பட்டுள்ள பயத்தை இந்தியா கூட்டணி தலைவர்கள் உணர்ந்தாக வேண்டும். இதை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்! இப்போது கிடைத்திருக்கும் வாய்ப்பை இறுகப் பற்றிக் கொள்ள வேண்டும்! நாம் ஒற்றுமையாக இருந்தால் நிச்சயமாக பா.ஜ.க. தோற்கடிக்கப்படும்! ஜனநாயகம் வெல்லும்! அதனைக் காலம் சொல்லும்! தொல். திருமாவளவனும் வெல்வார்! அதையும் காலம் சொல்லும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## கேப்டன் விஜயகாந்துக்கு பத்மபூஷன் விருது அறிவித்தமைக்கு நன்றி!

# தமிழ்நாட்டிலிருந்து பத்மவிபூஷன் - பத்மஸ்ரீ விருதுக்கு தேர்வாகியுள்ளவர்களுக்கு வாழ்த்துகள் !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஜன.28-**

**தமிழ்நாட்டிலிருந்து நாட்டின் உயரிய விருதான பத்மவிபூஷன் விருதுக்குத் தேர்வாகியுள்ள மூத்த கலைஞர்கள் வைஜெயந்தி மாலா மற்றும் பத்மா சுப்ரமணியம் ஆகியோருக்கு வாழ்த்து தெரிவித்ததுடன் தமிழ்நாட்டிலிருந்து பத்மஸ்ரீ விருதுக்கு தேர்வாகியுள்ளவர்களுக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.**

**மேலும் மறைந்த கேப்டன் விஜயகாந்த் அவர்களுக்குப் பத்மபூஷன் விருது அறிவித்தமைக்கு முதல்வர் அவர்கள் நன்றியைத் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

தமிழ்நாட்டில் இருந்து நாட்டின் இரண்டாவது உயரிய விருதான பத்மவிபூஷன் விருதுக்குத் தேர்வாகியுள்ள மூத்த கலைஞர்கள் வைஜெயந்தி மாலா மற்றும் பத்மா சுப்ரமணியம் ஆகிய இருவருக்கும் எனது வாழ்த்துகள்.

மேலும் பத்மஸ்ரீ விருதுக்குத் தேர்வாகியுள்ள பத்திரப்பன் (கலை) ஜோஷ்னா சின்னப்பா (விளையாட்டு), ஜோ டி குரூஸ் (இலக்கியம்), சேஷம்பட்டி சிவலிங்கம் (கலை), நாச்சியார் (மருத்துவம்) ஆகியோருக்கும் எனது வாழ்த்துகள்.

தமிழ்நாட்டில் பிறந்து பப்புவா நியூ கினியில் ஆளுநர் பொறுப்பு வரை உயர்ந்த திரு. சசீந்திரன் முத்துவேல், அந்தமானைச் சேர்ந்த இயற்கை விவசாயியான திருமதி செல்லம்மாள் ஆகியோரையும் பத்மஸ்ரீ விருது பெறுவதற்காகத் தமிழனாகப் பாராட்டி மகிழ்கிறேன்.

அண்மையில் மறைந்த எனது நண்பர் கேப்டன் விஜயகாந்த் அவர்களுக்குப் பத்மபூஷன் விருது அறிவித்தமைக்காக எனது நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

# சென்னை குடியரசு தினவிழாவில் முதலமைச்சரின் சிறப்பு விருதுபெற்ற மதுரை ஆயி அம்மாள் முதல்வருக்கு கண்ணீர் மல்க நன்றி கூறினார்!

**சென்னை, ஜன.28**

**குடியரசு தினவிழாவில் முதலமைச்சரின் சிறப்பு விருது பெற்ற மதுரை திருமதி ஆயி அம்மாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு ஆனந்தக் கண்ணீர் சிந்தி பெருமிதத்துடன் நன்றி கூறினார்.**

மதுரை கிழக்கு ஒன்றியம். யா.கொடிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி உ.ஆயி அம்மாள் என்ற பூரணம் அவர்கள் தான் படித்த யா.கொடிக்குளம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் பொருட்டு கட்டடங்கள் கட்டுவதற்காக 1 ஏக்கர் 52 சென்ட் நிலத்தினை தனது மகள் ஜனனி என்பாரின் நினைவாகத் தானமாக வழங்கியுள்ளார். இதனைப் பாராட்டி திருமதி ஆயி அம்மாள் அவர்களுக்கு தமிழ்நாடு அரசின் முதலமைச்சர் சிறப்பு விருதினை முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் குடியரசு நாள் விழாவில் வழங்கினார்கள்.

விருதுபெற்ற பின் திருமதி ஆயி அம்மாள் அவர்கள் கூறியபோது, முதலமைச்சர் அவர்களிடம் இன்று விருதுபெற்ற நேரத்தில், நான் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே கிடையாது.

முதலமைச்சர் அவர்களின் கையாலேயே விருது வாங்கியிருப்பதை எண்ணும்போது, நன்றி சொல்ல நினைத்த போது வார்த்தையே வரவில்லை. அழுகையாக, ஆனந்தக் கண்ணீராகத் தான் வருகிறது.

கல்வி வளர்ச்சிக்காக என்னுடைய மகளுடைய எண்ணம் நிறைவேறுவதற்காக நான் அளித்த நிலம் தொடர்பான செய்திகளும் விருதும் உலகளவில் இன்று பேசப்படுவது எனக்கு ரொம்ப ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது.

நான் படித்த பள்ளிக்கு நிலம் வழங்கிய செய்தியை அறிந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் தம்பி உதயநிதி அவர்கள் பொங்கல் விழாவின்போது 17.1.2024 அன்று என்னுடைய வீடுதேடி வந்து என்னைப் பாராட்டியது அதிர்ச்சியாகவும் எனக்கு ஆனந்தமாகவும் இருந்தது.

இந்த நேரத்தில் என்னுடைய பெற்றோரை, என் கணவரை, என் மகளை நினைந்து ஆனந்தம் அடைகிறேன்.

எனக்கு விருது வழங்குவதற்கு முன்னதாக திருநெல்வேலியைச் சேர்ந்த இளைய தலைமுறையைச் சேர்ந்த ஒரு தம்பிக்கு முதலமைச்சர் அவர்கள் விருது வழங்கினார்கள்.

கடந்த டிசம்பரில் 18, 19 ஆகிய நாட்களில் பெய்த பெருமழையால் ஏற்பட்ட வெள்ளத்தின்போது தன் னலம் கருதாமல் துணிச்சலோடு தன் உயிரையும் துச்சமென நினைத்து மீட்புப் பணிகளில் ஈடுபட்ட துணிச்சலான செயலைப் பாராட்டி செல்வன் தே.டேனியல் செல்வசிங் அவர்களுக்கு வீரதீரச் செயலுக்கான விருதையும் முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். அந்தக் காட்சியும் எனக்கு ஆனந்தத்தையும் பெருமிதத்தையும் அளித்தது. அதற்கும் முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய சந்தோசத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன் என்று கூறியபோது திருமதி ஆயி அம்மாள் அவர்கள் ஓர் உணர்ச்சிப் பிழம்பாகக் காட்சியளித்தது அனைவரையும் நெகிழச் செய்தது.

---

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்** அவர்களால் தொடங்கப்பட்ட "உடன்பிறப்புகளாய் இணைவோம்" என்ற மாபெரும் முன்னெடுப்புடன் "முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு மற்றும் கழக பவளவிழா ஆண்டு" புதிய உறுப்பினர் சேர்த்தல் பணிகள் முடிந்து

# புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் வழங்கல் (நான்காவது கட்டம்)

## தலைமைக் கழக அறிவிப்பு!

இந்திய வரலாற்றில் ஜனநாயக முறைப்படி உறுப்பினர் சேர்த்தலும் - புதுப்பித்தலுமான பணிகள் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து வார்டு கிளைகள், ஊராட்சி, பேரூர், ஒன்றிய, நகர, பகுதி, நகரிய, மாவட்ட, மாநகர் மாவட்ட, மாநில அமைப்புகள், தலைமைக் கழகம் ஆகியவற்றுக்கு தேர்தல் நடத்தி, நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்து அமைப்புக்களை செயற்படுத்தும் கட்சி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்றுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நாடறியும். ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 140 வார்டு கழகங்களையும், 1 கோடியே 10 இலட்சத்திற்கு மேல் உறுப்பினர்களையும் கொண்ட தி.மு.கழகம்.

"தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் அரை நூற்றாண்டு காலம் கட்டி காத்த நம் கழகத்தை மேலும் வலிமைப்படுத்த, மேலும் ஒரு கோடி உறுப்பினர்கள் சேர்க்க "உடன்பிறப்புகளாய் இணைவோம்" என்ற மாபெரும் முன்னெடுப்பு கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கப்பட உள்ளது. ஏற்கனவே, ஒரு கோடி உறுப்பினர்களைக் கொண்ட பேரியக்கத்தில், புதிதாக மேலும் ஒரு கோடி உறுப்பினர்களைச் சேர்க்கும் பெருமுயற்சியை ஏப்ரல் 3ஆம் தேதியன்று தொடங்கி, ஜூன் 3, 2023 தலைவர் கலைஞர் நூற்றாண்டு தொடங்குவதற்குள் இப்பணியை நிறைவேற்றுவதென இக்கூட்டம் நிறைவேற்றிடும் வகையில், துண்டறிக்கைகள் மூலமாகவும், திண்ணைப் பிரச்சாரங்கள் மூலமாகவும், முக்கிய இடங்களில் முகாம்கள் அமைப்பது மூலமாகவும், வீடு தோறும் தேடிச் சென்றும் புதிய உறுப்பினர்களைக் கழகத்தில் இணைத்திடுவோம்." என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், கடந்த 22.3.2023 அன்று நடைபெற்ற 'தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில்' நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி,

2023 ஏப்ரல் 3ஆம் தேதி முதல் 2023 ஜூன் 3ஆம் தேதி வரை, "முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு மற்றும் கழக பவளவிழா ஆண்டு" உறுப்பினர்களை சேர்த்தல் பணிகளை "உடன்பிறப்புகளாய் இணைவோம்" என்ற மாபெரும் முன்னெடுப்புடன் ஒரு கோடி புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. கழகத் தோழர்கள் மற்றும் நிர்வாகிகளும் மேற்குறிப்பிட்ட தேதி முதல் உறுப்பினர்களை சேர்க்கும் பணியினைத் தொடங்கி, உடனுக்குடன் படிவங்களை தலைமைக் கழகத்தில் சேர்ப்பித்தனர்.

அவ்வாறு தலைமைக் கழகத்தில் வரப் பெற்ற படிவங்கள் முறைப்படி பரிசீலனை செய்யப்பட்டு, புதியதாக சேர்க்கப்பட்ட உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை தலைமைக் கழகம் தயாரித்துள்ளது.

முதற் கட்டமாக, தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்ட **இரசீது எண். 1 முதல் எண். 2800 வரை** இப்புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்கள் கடந்த 7.11.2023 முதல் 10.11.2023 தேதிகளில் முதற்கட்டமாகவும்; 27.12.2023 முதல் 30.12.2023 வரை இரண்டாம் கட்டமாகவும்; 11.1.2024 முதல் 13.1.2024 வரை மூன்றாவது கட்டமாகவும் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து;

தற்போது, நான்காவது கட்டமாக, தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்ட **இரசீது எண். 2801 முதல் 4100 வரை** எண் கொண்ட இரசீதுகள் வைத்திருப்போர் கீழே குறிப்பிட்டுள்ள மாவட்டங்களில் இருக்குமேயானால், அந்த ஒரிஜினல் ரசீதையும், தங்களிடம் உள்ள உறுப்பினர் சேர்த்தல் பட்டியலையும், **2024 ஜனவரி 29-ஆம் தேதி முதல் பிப்ரவரி 3-ஆம் தேதிக்குள்**, தலைமைக் கழகத்திற்கு நேரில் வந்து, இரசீது எண்ணையும், பட்டியலையும் சரி பார்த்து பெற்றுச் செல்ல வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

புதிய உறுப்பினர்களை சேர்த்து பணம் செலுத்தி இரசீது பெற்றவர்கள், நேரில் வந்து உறுப்பினர் சீட்டுகள் பெற முடியாத நிலை ஏற்படுமாயின், அவர்களால் நியமித்து அனுப்பப்படும் முகவரிடம், தாங்கள் கைப்பட எழுதிய பரிந்துரை கடிதமும், ஒரிஜினல் இரசீதையும் கொடுத்து புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை பெற்றுக் கொள்ளலாம். இரசீதின் ஜெராக்ஸ் நகல் ஏற்றுக் கொள்ளப்படாது.

**புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை, தலைமைக் கழகத்தில் பெற்றுக் கொண்டவர்கள், உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை உரியவரிடம் ஒப்படைத்து, அதற்குரிய அத்தாட்சி கடிதத்தை பெற்று, அக்கடிதத்தினை ஒருவார காலத்திற்குள் தலைமைக் கழகத்திற்கு கண்டிப்பாக அனுப்பி வைத்திட வேண்டும்.**

**உறுப்பினர் உரிமைச் சீட்டு வழங்கப்படும் மாவட்டங்கள்**
**தலைமைக் கழக இரசீது எண். 2801 முதல் 4100 வரை**

1) சென்னை வடக்கு
2) சென்னை வடகிழக்கு
3) சென்னை கிழக்கு
4) சென்னை மேற்கு
5) சென்னை தென்மேற்கு
6) சென்னை தெற்கு
7) திருவள்ளூர் கிழக்கு
8) காஞ்சிபுரம் வடக்கு
9) காஞ்சிபுரம் தெற்கு
10) ராணிப்பேட்டை
11) வேலூர்
12) திருப்பத்தூர்
13) திருவண்ணாமலை வடக்கு
14) விழுப்புரம் வடக்கு
15) கள்ளக்குறிச்சி வடக்கு
16) கள்ளக்குறிச்சி தெற்கு
17) கடலூர் மேற்கு
18) தஞ்சை தெற்கு
19) கரூர்
20) புதுக்கோட்டை வடக்கு
21) சேலம் மத்திய
22) நாமக்கல் மேற்கு
23) தருமபுரி மேற்கு
24) கிருஷ்ணகிரி கிழக்கு
25) கிருஷ்ணகிரி மேற்கு
26) கோவை வடக்கு
27) கோவை மாநகர்
28) ஈரோடு தெற்கு
29) நீலகிரி
30) மதுரை வடக்கு
31) மதுரை தெற்கு
32) தேனி தெற்கு
33) திருநெல்வேலி கிழக்கு

குறிப்பு : தலைமைக் கழக இரசீது எண்.4101க்கு மேல் உள்ள இரசீதுகளுக்கான உறுப்பினர் உரிமைச் சீட்டு வழங்கும் விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**இரண்டாவது கட்டமாக வழங்கப்பட்ட இரசீது எண் 1001 முதல் 2800 வரையிலான உறுப்பினர் உரிமைச் சீட்டு பெற்றுக் கொண்டு செல்லாதவர்கள் உடனடியாக தலைமைக் கழகத்திற்கு நேரில் வந்து பெற்றுக் கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 27-01-2024

**தலைமைக் கழகம்**
தி.மு.க.